25% of the net profit will gladly be contributed to
The Tanjore Borstal Association Funds.

BORSTAL
FIRST READER

(TAMIL.)

250

By
D. S. Balasubramaniyam Sastri,
Telugu and Uriya Teacher,
Borstal School,
TANJORE.

FIRST EDITION.

2000 copies.] 1927. [Price 3 Annas.

Borstal Motto :–Vincit Qui Se Vincit.

T-UN-500

* பார்ஸ்டல் தமிழ் வாசகத் தொடர்.

பார்ஸ்டல்

முதல் வாசகம்.

(தமிழ்.)

தஞ்சாவூர்,
பார்ஸ்டல் ஸ்கூல்,
தெலுங்கு, உரியா உபாத்தியாயர்,
தே. சு. பாலசுப்பிரமணிய சாஸ்த்ரி
இயற்றியது.

முதற் பதிப்பு.

பூர்ணனந்தா அச்சுக்கூடம்,
தஞ்சாவூர்.

2000 காப்பி.] 1927. [விலை அணா 3.

FOREWORD.

This little book aims at nothing but providing a way out of the many difficulties and obstacles while teaching the adolescent students. It has no claim to completeness of any kind. It is just the proper aid to the student and I am convinced of its real educational value.

The work is more useful, simple, and compact and can be recommended as an introduction to beginners who desire to gain a rapid knowledge of primary tamil.

Borstal School,
Tanjore.
13—10—27.

F. E. HITCHIN,
Superintendent.

PREFACE.

IT has often been observed that the readers authorised for use in Elementary schools, having been prepared for young children, are not suitable for adolescents and there has been consequently a longing for a series of readers the subject matter of which should be of more use and interest to older minds. This reader has been prepared solely to meet that necessity and the author will feel amply paid if the said purpose is achieved even to a little extent.

THE author's thanks are specially due to, **Lieut. Col. J. P. CAMERON, Esq., C. I. E., I. M. S.** Inspector General of Prisons and Chief Inspector of Certified schools, Madras for his kind permission to publish this book and also to **Lieut. F. E. HITCHIN Esq.**, Superintendent of the Borstal School, Tanjore, for his good encouragement and valuable suggestions in the preparation thereof.

D. S. B Sastri.

உ

கடவுள் துணை.

பார்ஸ்டல் முதல் வாசகம்.



அ



ஆ



இ

ஈ

உ



ஊ

அ

ஆ

இ

ஈ

உ

ஊ

 எ	 ஏ	எ ஏ
 ஒ	 ஓ	ஐ ஒ
 ஐ	 ஔ	ஓ ஔ

* உபாத்தியாயர் இந்த முதலிரண்டு பக்கங்களிலும் இடது பக்கத்தெழுத்திற்கு வலது பக்கத்தெழுத்து "இனவெழுத்து" என்று கற்பித்தல் வேண்டும்,



ட



ப



ம

வ



ர



ச



க

த



ந

ம	 மரம்.	ம்

* இதில் உபாத்தியாயர் ம, ம் இவற்றை எழுதுவதிலும், உச்சரிப்பதிலுமுள்ள பேதத்தை நன்கு விளக்கிக்கற்பித்தல் வேண்டும்.

க	ங*	ச	ஞ*	ட	ண*
த	ந	ப	ம	ய*	ர
ல*	வ	ழ•	ள*	ற*	ன*

* இவ்வெழுத்துக்களை உபாத்தியாயர் அடியிற்கண்ட வார்த்தைகளிலிருந்தும், அவைபோன்ற இதர வார்த்தைகளிலிருந்தும் கற்பித்தல் வேண்டும்.

ஙகரம்	ஞயம்	மணம்
பயம்	வலம்	பழம்
களம்	அறம்	சனம்

அம்	ஆம்	இம்	ஈம்
உம்	ஊம்	எம்	ஏம்
ஐம்	ஒம்	ஓம்	ஔம்
கம்	சம்	டம்	ணம்
தம்	நம்	பம்	மம்
யம்	ரம்	லம்	வம்
ழம்	ளம்	றம்	னம்

* துறிப்பு:—இதனடியிற் கொடுத்திருக்கும் களம் முதலிய வார்த்தைகளைப்போன்ற பல ஈருயிர் வார்த்தைகளை கறுப்புப்பலகை மேலெழுதியும், தாமேஉச்சரித்தும், பையன்களுக்கு எழுத்துக்கூட்டக் கற்பித்தல் வேண்டும் வேண்டுமாயின் ஆறுவது பக்கத்திலுள்ள **அடம் முதலிய வார்த்தைகளையும்** இங்கு உபயோகித்துக்கொள்ளலாம்.

க + ளம் = களம்	ச + லம் = சலம்
த + டம் = தடம்	ப + ணம் = பணம்
ந + லம் = நலம்	ம + தம் = மதம்
ம + ரம் = மரம்	ஞ + யம் = ஞயம்
வ + லம் = வலம்	ப + ழம் = பழம்
அ + றம் = அறம்	ம + னம் = மனம்



க, அ



கா, ா - ஆ

ங			ஙா
ச	அடம்	ஆரம்	சா
ஞ	கலம்	காதம்	ஞா
ட	சலம்	சாரன்	டா
ண	ஞயம்	ஞாலம்	ணா*
த	வடம்	வாணாள்*	தா
ந	பணம்	தாயார்	நா
ப	தவம்	நாவாய்	பா
ம	நகம்	பாலன்	மா
ய	மதம்	மாதர்	யா
ர	பயம்	வாசல்	ரா
ல	ரதம்	லாயம்	லா
வ	லயம்	யாமம்	வா
ழ	பழம்	கரூர்	ழா
ள	வளம்	ஆழம்	ளா
ற	அறம்	ராகம்	றா*
ன	தனம்	தானக	னா*

* உபாத்தியாயர் மகர ஒற்றேபோல் மற்றைய ஒற்றுக்களையும் கண், பல் முதலிய ஒருயிர் வார்த்தைகளிலிருந்து கற்பித்தல்வேண்டும்.

கி, ி = இ

கீ, ீ = ஈ

ஙி	இடி	ஈட்டி	ஙீ
சி	கிளி	கீரல்	சீ
ஞி	சிபி	சீமான்	ஞீ
*டி	லிபி	தீரம்	டீ*
ணி	திரி	நீட்சி	ணீ
தி	மிதி	மீறி	தீ
நி	பிடி	ரீதி	நீ
பி	விழி	வீசம்	பீ
மி	நிதி	பீடம்	மீ
யி	பிணி	ஈயம்	யீ
ரி	ஆவி	சீவன்	ரீ
லி	தாழி	நீளம்	லீ
வி	வாழி	வீதி	வீ
ழி	ஞானி	நீலம்	ழீ
ளி	விளி	லீனம்	ளீ
றி	பறி	சீதம்	றீ
னி	மானி	தீபம்	னீ



கு, ு = உ



கூ, ூ = ஊ

*ஙு	உயிர்	ஊசி	ஙூ*
*சு	சங்கு	கூவு	சூ*
*ஞு	நஞ்சு	சூடு	ஞூ*
*டு	தண்டு	தூளி	டூ*
ணு	சந்து	நூறு	ணூ
து	நம்பு	பூட்டு	தூ
நு	அணு	மூடி	நூ
பு	முயல்	யூபம்	பூ
*மு	வாயு	ரூபம்	மூ*
யு	ருசி	தூதன்	யூ
ரு	ஈவு	சூடம்	ரூ*
லு	மழு	கூற்று	லூ
வு	தள்ளு	பூதம்	வூ
*ழு	கன்று	மூக்கு	ழூ*
ளு	மனு	யூகம்	ளூ
று	குழாய்	தூபம்	றூ
னு	நுனி	பூணூல்	னூ

		
கெ, ெ = எ	கே, ே = ஏ	கை, ை = ஐ

ஙெ	ஙே	ஙை	கையை வை
செ	சே	சை	சைகை செய்
ஞெ	ஞே	ஞை	வேட்டையாடு
டெ	டே	டை	கடவுள் துணை
ணெ	ணே	ணை*	எது தேவை
தெ	தே	தை	நல்ல பாதை
நெ	நே	நை	புதிய நெய்
பெ	பே	பை	காலை நேரம்
மெ	மே	மை	வாயை மூடு
யெ	யே	யை	தேரை இழு
ரெ	ரே	ரை	பாட சாலை
லெ	லே	லை*	வைகை ஆறு
வெ	வே	வை	வேலி கட்டு
ழெ	ழே	ழை	வாழை இலை
ளெ	ளே	ளை*	நல்ல வேளை
றெ	றே	றை	கற் பாறை
னெ	னே	னை*	தேனை எடு

		
கொ, ொ = ஒ	கோ, ோ = ஓ	கௌ, ௌ = ஔ

ஙொ	ஙோ	ஙௌ	ஓணான் ஓடும்
சொ	சோ	சௌ	ஔவைக் குறள்
ஞொ	ஞோ	ஞௌ	தோழி வந்தாள்
டொ	டோ	டௌ	கோடை காலம்
ணொ	ணோ	ணௌ	நேரம் போக்கு
தொ	தோ	தௌ	கோழி கூவும்
நொ	நோ	நௌ	கடவுளைத் தொழு
பொ	போ	பௌ	உப்புக் கோடு
மொ	மோ	மௌ	என்ன சொன்னாய்
யொ	யோ	யௌ	தொண்டு கிழவன்
ரொ	ரோ	ரௌ	வௌவால் குஞ்சு
லொ	லோ	லௌ	தென்னந் தோப்பு
வொ	வோ	வௌ	நல்ல நோன்பு
ழொ	ழோ	ழௌ	சாலை ஓரம்
ளொ	ளோ	ளௌ	சௌபரி முனி
றொ	றோ	றௌ	கோழி முட்டை
னொ	னோ	னௌ	சோடி காளை

அணி	எலி	கனி	கெலி
ஆறு	ஏழு	காது	கேணி
இடி	ஐயர்	கிளி	கைதி
ஈகை	ஒடி	கீரி	கொடி
உமி	ஓடு	குழி	கோணி
ஊசி	ஔவை	கூடு	கௌளி

ஒன்று;	கடவுள்	ஒன்று	1.
இரண்டு;	கண்கள்	இரண்டு	2.
மூன்று;	குணங்கள்	மூன்று	3.
நான்கு;	வேதங்கள்	நான்கு	4.
ஐந்து;	புலன்கள்	ஐந்து	5.
ஆறு;	சுவைகள்	ஆறு	6.
ஏழு;	கிழமைகள்	ஏழு	7.
எட்டு;	திசைகள்	எட்டு	8.
ஒன்பது;	நிதிகள்	ஒன்பது	9.

தமிழ் எழுத்துக்கள்.

ஃ	அ	ஆ	இ	ஈ	உ	ஊ
க்	க	கா	கி	கீ	கு	கூ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ
த்	த	தா	தி	தீ	து	தூ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ
ற்	ற	றா	றி	றீ	று	றூ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ

குறிப்பு:—“ஃ” என்பது தனிநிலை; “அ” முதல் “ஔ” வரையில் (12) உயிர்; “க்” முதல் “ன்” வரையில் (18) மெய்; மற்றைய (216) எழுத்துக்கள் உயிர்மெய் என்று கற்பிக்கவும்.

தமிழ் எழுத்துக்கள்.

எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
கெ	கே	கை	கொ	கோ	கௌ
ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
டெ	டே	டை	டொ	டோ	டௌ
ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
தெ	தே	தை	தொ	தோ	தௌ
நெ	நே	நை	நொ	நோ	நௌ
பெ	பே	பை	பொ	போ	பௌ
மெ	மே	மை	மொ	மோ	மௌ
யெ	யே	யை	யொ	யோ	யௌ
ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
லெ	லே	லை	லொ	லோ	லௌ
வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
றெ	றே	றை	றொ	றோ	றௌ
னெ	னே	னை	னொ	னோ	னௌ

ஈரெழுத்துப் பதங்கள்

ஆண்	கண்	மீன்	தேள்
ஆள்	பல்	வீண்	வேல்
ஈர்	கல்	நீர்	பேர்
ஊன்	மண்	சீர்	மேல்
உண்	கள்	புண்	சொல்
ஏன்	மால்	தூண்	நொய்
எள்	பாய்	சூல்	போர்
ஓர்	வாழ்	பூண்	கோள்
ஊர்	தார்	செல்	நோய்
ஆல்	யான்	பெண்	தோல்

அது	படை	சோறு	யானை
அடி	நடை	வேலை	மேடு
ஏணி	வழி	குழி	சேவை
பானை	களி	கூடை	கோழி
காடு	தரி	தோணி	ஒரு
வாழி	பரி	ஈடு	தேவி
சாமி	மது	காவி	தாதி
ஞானி	ஏடு	பாதி	கௌரி
நாழி	தேனீ	ஏது	மௌளி
வாழை	வீடு	பொடி	தோழி

* வார்த்தையில் முதலெழுத்தாக இந்த னகரம் வராதென்றும் இந்த நகரம் வருமென்றும் கற்பிக்கவும்.

மூவெழுத்துப் பதங்கள்.

அவள்	அன்று	கண்டி	தமிழ்
இதழ்	இல்லை	சங்கு	கலம்
உயிர்	உண்டு	நஞ்சு	சிவன்
ஏவல்	ஞண்டு	டப்பி	முறம்
ஈசன்	ஈற்று	தம்பி	சாட்சி
ஊதல்	ஊட்டு	பட்டு	தூபம்
எவன்	எல்லை	மங்கை	சேவல்
ஏலம்	ஓட்டு	வண்டி	தையல்
ஐயர்	ஐந்து	மூக்கு	மோகம்
ஓடம்	ஒன்று	பந்து	சௌளம்

அகடு	இறகு	விழுது	பெருமை
விசிறி	பழுது	பூரணி	சிறுமி
கிணறு	கவலை	மெழுகு	சாதனை
முதுகு	துறவி	தவிடு	பதுமை
துறவு	கழுதை	மேதினி	செம்மை
கழுகு	வரவு	பிறவி	குடகு
செவிடு	எருது	வேதனை	மலடி
வறுமை	கருணை	உலகு	எருமை
செலவு	யோகம்	சிறுமை	விகுதி
பறவை	கடலை	கிழவி	குழவி

* இந்த றகரத்திற்கு முன்பு னகரஒற்று வருமாயின் இந்தனகர ஒற்றுதான் வருமென்றும், தகரத்திற்கு முன்பு நகர ஒற்று வருமாயின் இந்த நகர ஒற்றுதான் வருமென்றும் கற்பிக்கவும்.

நாலெழுத்துப் பதங்கள்.

பக்கம்	கண்கள்	எழுத்து
தச்சன்	சங்கம்	நெருப்பு
மட்டம்	மஞ்சள்	தடுக்கு
சத்தம்	வண்டல்	அரத்தை
அப்பம்	தந்தம்	முகப்பு
தும்மல்	கம்பன்	துரும்பு
கண்ணன்	தென்றல்	கிழக்கு
அல்லல்	பாய்தல்	எறும்பு
பள்ளம்	கற்கள்	கரந்தை
முற்றம்	தற்பரை	வழக்கு
அன்னம்	சற்குரு	வெறுப்பு

திருநீறு	முகவுரை	கணையாழி
குணநிதி	தலைவிதி	சுழிமுனை
புதுவழி	மரவுரி	முடிவுரை
மனுநீதி	காளைமாடு	கோரதம்
சுகவழி	பூவரசு	கொசுவலை
கருவிழி	தனிவழி	தலையணை
மணமாலை	சரமாரி	பலவகை
கடைவீதி	பதினாறு	குருமொழி

ஆடி	அடி	பால்	பல்
கால்	கல்	நாகம்	நகம்
இனும்	இனம்	நீலம்	நிலம்
வீடு	விடு	சீவன்	சிவன்
மூட்டை	முட்டை	சூடு	சுடு
தூக்கம்	துக்கம்	யூகம்	யுகம்
கேடு	கெடு	ஏரி	எரி
சேவி	செவி	நேற்று	நெற்று
தோட்டி	தொட்டி	தோண்டு	தொண்டு
நோய்	நொய்	கோடை	கொடை

* குறிலை நெடிலாக் குவதாலும், நெடிலைக்குறிலாக்குவதாலும் வார்த்தைகளின் பொருள்கள் வித்தியாசப்படும் என்று கற்பிக்கவும்.

தோள்	தேள்	தாள்
நொய்	நெய்	நாய்
கோணி	கேணி	காணி
சோலை	சேலை	சாலை
போதம்	பேதம்	பாதம்
கோடு	கேடு	காடு
சோறு	சேறு	சாறு
போய்	பேய்	பாய்
சோதி	சேதி	சாதி

* எழுத்தில் சிறிது பாகத்தை எழுதாமல் விட்டுவிடுவதால் வார்த்தையின் பொருள் பெரிதும் மாறுகின்றது என்பதை இப்பாடத்தால் உபாத்தியாயர் விளக்கிக் காட்டவேண்டும்.

நீதி வாக்கியங்கள்.

——:0:——

1. அரசனை நேசி.
2. ஆசானை வழிபடு.
3. இன்சொல் வழங்கு.
4. ஈசனை யேற்று.
5. உண்மையே பேசு.
6. ஊக்கம் கடைப்பிடி.
7. எதையும் பொறு.
8. ஏற்பது நிறுத்து.
9. ஐம்புல னடக்கு.
10. ஒற்றுமையாய் வாழ்.
11. ஓதிச் சுகமுறு.
12. ஔவியம் விலக்கு.



1. கிளி.

இந்தப் படத்தைப் பார். இதில் காண்பது என்ன? சொல்; பார்ப்போம். இது ஒரு பறவை. இது நன்ருகப் பறக்கும். இதன் பெயர் பச்சைக்கிளி.

பச்சைக்கிளிகள் பார்வைக்கு எவ்வளவோ அழகானவை. அவைகள் பழங்களையும் தானியங்களையும் தின்னும்.

கிளிகள் மிகவும் இனிமையாகப் பேசும். கிளிகளின் பேச்சைக் கேட்க நாம் ஆசைப்படுகிறோம். அவைகளைக் கூடுகளில் வைத்து வளர்க்கிறோம். வேளை தவருமல் நாம் அவைகளுக்கு பாலும் சோறும் கொடுக்கிறோம். ஏன்?

"இன்சொல் வழங்கு"

2. பசு.



பசு மிகவும் சாதுவான பிராணி. அது புல்லையும் வைக்கோலையும் தின்னும். புல்லை மேய்வதற்காகப் பசுக்களை இடையன் கழனிகளுக்கு ஓட்டிக்கொண்டு போகிறான். அங்கே பகலெல்லாம் மேய்த்து சாயங்காலத்தில் அவன் அவைகளைத் திரும்ப வீட்டிற்கு ஓட்டிக்கொண்டு வருவான். பசுக்களுக்கு தவிடு, பருத்திக்கொட்டை, பிண்ணாக்கு இவைகளைத் தின்ன மிகவும் இஷ்டம்.

பசு நமக்கு பால் தருகின்றது. பால் வெண்மையாயும் மதுரமாயும் இருக்கும். நாம் பாலைக் குடிக்கலாம். அது நமது திரேகத்திற்கு மிகுந்த ஆரோக்கியத்தை உண்டாக்கும். பாலைக் காய்ச்சி உறைகுத்தினால் அது உறைந்து தயிராகும். தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுக்கலாம். வெண்ணெயை உருக்க நெய்யாகும்.

"பசு இருந்தால் பசி இல்லை."

3. வாழைமரம்.

பலவிதங்களிலும் நமக்கு உபயோகப் படுகின்ற மரங்களில் வாழைமரம் ஒன்று. அதற்கு ஆல், அரசு, பலா முதலிய மரங் களைப்போலக் கிளைகள் இல்லை. தென்னை, பனை முதலிய மரங்களைப்போல மட்டை களும் இல்லை. ஆனால் அதன் இலைகள் நீண்டு வளர்ந் திருக்கும். அந்த இலைகளில் நாம் போசனம் செய் கிறோம்.

வாழைமரத்திற்கு விதைகள் இல்லை. அதன் கிழங்கிலிருந்து கன்றுகள் உண்டாகின்றன. அந்த வாழைக்கன்றுகளை ஜனங்கள் பெயர்த்து வேறு இடங் களில் கொண்டுபோய் நடுவார்கள். அங்கே அவைகள் வளர்ந்து வாழைமரங்களாகும். வாழை வைத்த ஆறு மாதங்களில் தாரு போடும். அதில் ஏறக்குறைய நூறு அல்லது நூற்றிருபது காய்கள் இருக்கும். சில தாருகளில் சுமார் இருநூறுகாய்கள் வரையிலுங்கூட உண்டாகும்.

வாழைமரத்தின் எல்லா பாகங்களும் நமக்கு உப யோகமுள்ளவை. காயைக் கறி சமைக்கலாம். பழத்தைத் தின்னலாம். உள்தண்டையும் பூவையுங்கூடச் சிலர் சமைத்துத் தின்கிறார்கள். பட்டையை நாராகக்கிழித்து பூ முதலியவை கட்டலாம். தாரோடு வாழைமரங்களைக் கலியாணப் பந்தல்களில் அலங்காரமாகக் கட்டுவதை நாம் அதிகமாகப் பார்க்கிறோம்.

"உலகத்திற்கு உபயோகமாய் இரு."

4. ஒரு புத்திசாலி

ஓர் ஊரில் கண்ணன் என்று ஒரு குடியானவன் இருந்தான். அவன் மிகவும் யோக்கியன்; யாரோடும் வம்புக்குப் போகமாட்டான். அவனுக்கு ஒரு கொல்லை உண்டு. அதில் அவன் பலவித புஷ்பச்செடிகளை வைத்திருந்தான். அங்கு, அயல்வீட்டுக்காரன் வளர்த்து வரும் கோழிகள் அடிக்கடி வருவதும், பூஞ்செடிகளை அழிப்பதுமாக இருந்தது.

கண்ணன் நல்ல புத்திசாலி. அந்தக் கோழிகள் தனது தோட்டத்திற்குள் நுழையாமலிருக்க ஒரு தந்திரம் செய்தான். அவன் நாள்தோறும் ஏழெட்டு கோழி முட்டைகளை வாங்கினான். யாருக்குந்தெரியாமல் இராக் காலங்களில் அவைகளைத் தனது தோட்டத்தில் மூலைக் கொன்றாக வைத்தான். பொழுது விடிந்து கோழிகள் அங்கு வந்ததும் அவன் அவைகளை அங்குமிங்கும் துரத்திவிட்டு அங்குள்ள முட்டைகளைப் பொறுக்கி அவைகளைப் பஹிரங்கமாக விற்கத் தொடங்கினான்.

இங்ஙனம் கண்ணன் தனது கோழிகளைத் துரத்துவதையும், முட்டைகளைப் பொறுக்குவதையும், பிறகு விற்பதையும் அயல் வீட்டுக்காரன் கண்டான்; "தன் கோழிகளே அவன்தோட்டத்தில் முட்டையிடுகின்றன" என்றெண்ணினான்; அன்று முதல் கோழிகளை அந்தத் தோட்டத்திற்குள் நுழையாமலும் பார்த்துக்கொண்டிருந்தான். கண்ணனும் கவலையின்றி வாழ்ந்தான்.

"புத்தியின் பலமே பலம்"

5. தகப்பனும் மகனும்.

மகன்—அப்பா! அண்ணன் எங்கே போகிறான்!

தகப்பன்—மகனே! அவன் பாடசாலைக்குப் போகிறான்.

மகன்—அங்கே போய் அவன் என்ன செய்வான்?

தகப்பன்—அங்கே அவன் படிப்பு கற்றுக்கொள்வான்.

மகன்--அதைக் கற்றுக்கொள்வதால் என்னஉபயோகம்?

தகப்பன்----பிற்காலத்தில் அவன் அதிகக் கஷ்டமின்றி நிரம்பப் பணம் சம்பாதித்து சுகமாக வாழலாம்.

மகன்—சரி! நான் ஒன்று கேட்கிறேன்: நமது வீட்டில் மாடு மேய்க்கும் கோவிந்தன் ஒன்றுமே படித்திருக்கவில்லையே! அவனும் மாஸம் எட்டு ரூபாய் சம்பளம் வாங்குகிறானே: அதெப்படி?

தகப்பன்—பின்னால் சொல்லுகிறேன்; அவன் படிக்கவில்லை என்பது உனக்கு எப்படித் தெரிந்தது?

மகன்—ஏன்! இது எனக்குத் தெரியாதா! "ஐயோ, பாலியத்தில் நான் படிக்காததால் இப்பொழுது எனக்கு ஒரு கையெழுத்து போடக்கூடத் தெரியவில்லையே; என்ன செய்வேன்!" என்று அவன் ஏங்கி அழுதுகொண்டிருப்பதை நானே பல முறைகளிலும் பார்த்திருக்கிறேன்.

தகப்பன்—ஆமாம்; அவன் படிக்கவில்லை; மிகவும் கஷ்டப்படுகிறான். அடுத்த வீட்டு வேம்புவய்யர் நன்றாகப் படித்தவர். இப்பொழுது ஸுகமாக மாதம் ஐயாயிரம் ரூபாய்க்குமேல் சம்பாதிக்கிறார். ஆஹா! அவருக் குஎன்ன கௌரவம் பார்த்தாயா.

மகன்—ஆமாம், அப்பா! இன்று முதல் நானும் பாடசாலைக்குப்போய் படித்துக்கொண்டு வருகிறேன்.

தகப்பன்—கண்ணே! நல்லது; அப்படியே செய்.

"வித்தை விருப்பு"

6. கோழிகள்.



சாதாரணமாக நாம் நமது வீடுகளில் கோழிகளை வளர்த்து வருகிறோம். மற்றைய பக்ஷிகளை வளர்ப்பதைவிட கோழிகளை வளர்ப்பது மிகவும் சுலபமானது. அவைகளுக்காக நாம் எவ்விதமான இரையையும் தேடிக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அவைகள் வெகுவாகப் பூமியில் ஊர்ந்துபோகும் புழுக்களைப் பிடித்துத் தின்னும். கோழிகள் தமது கால்களால் பூமியைச் சீய்த்துக்கொண்டு நிற்பதை நாம் பல இடங்களிலும் பார்க்கிறோம்.

ஆண்கோழிக்குச் சேவல் என்றும் பெண்கோழிக்குப் பெட்டை என்றும் பெயர். ஆண்கோழிக்கு அதிக அழகான சிறகுகள் உண்டு; தலையில் ஒருபெரிய கொண்டையும் உண்டு. பெட்டைக் கோழிக்கு அவ்வளவு அழகான சிறகுகள் இல்லை; தலையில் பெரிய கொண்டையும் கிடையாது. சேவலுக்குக் கோபம் அதிகம். சேவல்களின் கால்களில் கத்தியைக்கட்டி அவைகளைச் சண்டைக்குவிட்டு சிலர் வேடிக்கை பார்ப்பதும் உண்டு.

பெட்டைக்கோழி முட்டையிடும்; முட்டையின் மேல் இருந்து மூன்று வாரங்கள் வரையில் அடையங் காக்கும். முட்டைகளுக்கு சூடு உண்டாவதற்காக பக்ஷிகள் முட்டைகளின் மேல் உட்கார்ந்து இருப்பதற்கு அடையங்காப்பது என்று பெயர். அந்தச் சூட்டினல் முட்டைகள் வெடித்துக் குஞ்சுகள் வெளிக்கிளம்பும். முட்டைகளிலிருந்து உண்டாவதால் பக்ஷிகளுக்கு அண்டஜங்கள் என்ற ஒரு பெயரும் உண்டு.

7. ஒரு கதை.

ஒரு காட்டில் ஒருகிளி இரண்டு குஞ்சுகள் பொரித்திருந்தது. ஒருநாள் தாய்க்கிளி குஞ்சுகளுக்காக இரை தேடப் போயிருந்தது. அப்பொழுது ஒருவேடன் அந்தக் கிளிக்குஞ்சுகளைப் பிடித்துக்கொண்டு போய் விட்டான். அவன் வழியில் ஒன்றை ஒரு வேதியனுக்கும், மற்றொன்றை ஒரு கசாப்புக்காரனுக்கும் விற்றான். அவைகள் அவர்களிடத்தில் நன்றாக வளர்ந்து வந்தன. வயது ஆகஆக அவைகள் செம்மையாகப் பேசவும் பழகிவிட்டன.

ஒரு நாள் கசாப்புக்காரன் வளர்த்த கிளி கூட்டிலிருந்து தப்பித்துக்கொண்டு ஒரு குளக்கரையில் இருந்த ஒரு மரத்தில் வந்து உட்கார்ந்தது. அதே குளத்தின் மற்றொரு கரையில் இருக்கும் ஒரு மரத்தின் மேல்தான் வேதியன் வளர்த்துவரும் கிளி இருப்பது வழக்கம். அதலால் எப்பொழுதும் போல் அன்றைக்கும் அந்தக்கிளி அங்கு வந்திருந்தது.

ஒரு பாட்டைசாரி வெயிலில் நடந்து களைத்துக் குளத்தைக் கண்டதும் மெள்ளமெள்ள அதன் கரையிலிருந்த மரத்தின் நிழலில் வந்து களைப்பாற உட்கார்ந்தான். அந்த மரத்தில்தான் கசாப்புக்காரன் வளர்த்த கிளியும் உட்கார்ந்திருந்தது.

அந்தக் கிளி அந்த பாட்டைசாரியைக் கண்டதும் "விடாதே! இந்தக் கடாவை; சீக்கிரம் வெட்டு; விடலாகாது" என்று சொல்லிற்று. அதைக் கேட்டதும் பாட்டைசாரி பயந்து மரத்தை அண்ணாந்து பார்த்தான். உடனே கிளி "இந்தா ஆட்டுமாமிசம் அரைப்பணம்; கோழிமாமிசம் வேணுமா" என்றது. அப்பொழுது

பாட்டைசாரி மிகவும் பயந்து "துஷ்ட ஸஹவாஸம் கேடு விளைக்கும்; நான் இங்கு இருத்தல் தகாது" என்று எண்ணி விரைவாக அவ்விடம் விட்டு அவன் மற்றைய கரையிலுள்ள மரத்து நிழலுக்கு வந்து சேர்ந்தான்.

அங்கே வழக்கம்போல் வேதியன்பால் வளர்ந்த கிளி இருந்ததல்லவா! அது பாட்டைசாரியைப்பார்த்து "நல்வரவு ஆகுக; நிழலில் வருமின்; சிறிது களைப் பாறிச் செல்மின்; தேன் இருக்கிறது; பருகுமின்; பழங்கள் வேண்டுமா; நான் தங்கள் தாஸன்" என்று சொல்ல ஆரம்பித்தது. இதைக் கேட்டு பாட்டைசாரி திகைத்து, ஆச்சரியம் அடைந்து, அண்ணாந்து பார்த்தான்; கிளி இருப்பதையும், அது உபசரிப்பதையும் கண்டான்.

அப்பொழுது கிளி "பயப்படவேண்டாம்; கவலை கொள்ளவேண்டாம்; நாங்கள் இருவரும் ஒரு தாய் தந்தையரின் குழந்தைகளே; ஆயினும் என்னை ஒரு வேதியன் வளர்த்தான்; அந்தக் கிளியை வளர்த்தது ஒரு கசாப்புக்காரன்; எங்கள் குணத்தின் மாறுபாடு இயற்கையில் அமைந்தது அல்ல; சேர்க்கையால் விளைந்தது" என்று சொல்லிற்று. பாட்டைசாரி இதை கேட்டுத் தேறுதல் அடைந்து, அங்கே சிறிதுநேரம் தங்கி, களைப்பாறித் தன் வழி நோக்கினன்.

(வெண்பா.)

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே;—நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே; யவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று."

8. நல்ல பையன்.

நான் அதிக காலையிலேயே படுக்கையை விட்டு எழுந்தேன்; எனது கை கால் முகங்களை சுத்தம் செய்துகொண்டேன்; குலதேவதையையும், மதாசாரியரையும் தியானம் செய்தேன்; தாய்தந்தையரை வணங்கினேன்; இன்றைய பாடங்களையும் படித்தேன்; இன்னும் சிறிது நேரத்தில் கலாசாலைக்குப் போகப்போகிறேன்.

அங்கே எனக்குக் கைத்தொழில் கற்பிக்க ஒரு உபாத்தியாயர் இருக்கிறார். அவர் மிகவும் நல்லவர். அவர் எனக்குக் கற்பிப்பது நெசவு-தொழில். என்னைப் போல் இன்னும் அனேகம் பையன்கள் அவரிடம் நெசவு கற்றுக்கொள்ளுகிறார்கள்.

நாங்கள் அங்கு உபாத்தியாயர் சொற்படி நடக்கிறோம். அதனால் நாங்கள் நெசவில் நல்ல தேற்சி அடைந்திருக்கிறோம். இப்பொழுது நான் கூடிய வரையில் சுத்தமாக ஒருதுணி நெய்து முடிக்கக்கூடும்.

இதுபோல் எங்கள் கலாசாலையில் தச்சு, கொத்து, கொல், தையல் முதலிய பல வேலைகளையும் கற்பிக்க உபாத்தியாயர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு உபாத்தியாயரிடத்திலும் அனேகப் பையன்கள் அந்தந்த தொழிலைக் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

நாங்கள் தினந்தோறும் ஒருவேளை கைத்தொழில் உபாத்தியாயரிடம் தொழில் செய்யக் கற்றுக்கொள்வோம். பிறகு எழுத்தையரிடம் சென்று படிக்கவும் எழுதவும் கணக்குப் போடவும் கற்றுக்கொள்வோம். நாங்கள் இந்தச் சிறுவயதில் சோம்பித் திரியமாட்டோம்.

"சிறுவயதில் சோம்பித் திரிபவர்கள் வயது காலத்தில் போசனத்திற்குக் கூட கஷ்டப்படுவார்கள்" என்று எங்கள் எழுத்தையர் சொல்லியிருக்கிறார்.

1. "இளமையிற் கல்" 2. "வித்தை விரும்பு"

---

9. இரண்டு சினேகிதர்கள்.

சங்கரன்—தோடகா! என்ன! இன்னும் தூங்குகிறாய்! சீக்கிரம் எழுந்திரு. நேரமாகிவிட்டது. நமது ஜபத்தை முடித்துக் கொண்டு சிறிது கஞ்சி குடித்துத் தொழிற்சாலைக்குச் செல்வோம்.

தோடகன்—இதென்னடா எழவு. என்றைக்குப் பார்த்தாலும் "ஜபம்" "ஜபம்" என்று சொல்லிக் கொண்டு என்னைத் தூங்கவிடாமல் கழுத்தை அறுக்கின்றாய். ஜபமென்றால் என்ன? அதை எதற்காகச் செய்வது? அதையாவது விவரமாகச் சொல்லித் தொலை.

சங்கரன்—என்னடா தோடகா! இவ்வளவு கோபம் வருகிறதே! நாம் தினந்தோறும் செய்ய வேண்டிய முக்கிய கடமைகளில் ஜபமென்பதும் ஒன்றல்லவா? இதை நமக்கு ஏற்கனவேயே நமது எழுத்தையர் சொல்லிக் கொடுத்திருக்கவில்லையா?

தோடகன்—ஆம். அவர் சொல்லிக்கொடுத்தார். அதனாலென்ன! நான் மாத்திரம் ஒருநாளாவது ஜபம் செய்ததே கிடையாது.

சங்கரன்—ஏன்?

தோடகன்—ஏனு! சொல்லுகிறேன் கேள்: "கடவுள் நம்மை நேற்றைய தினம் வரையிலும் காப்பாற்றினுர். அதனுல் நாம் அவரிடத்து அன்பு பாராட்டி அவரைத் துதிக்கிருேம். அவர் இன்றும் நமது மனதை நல்வழியில் நாடும்படி செய்து நம்மை இரக்ஷிப்பாராக." என்றல்லவோ ஜபத்தின் பொருள். கடவுளை நாம் எப்பொழுதாவது கண்டதுண்டா? இல்லையே; அப்படியிருக்கக் கடவுள் ஒருவர் உண்டு என்றும், அவர் நம்மைக் காப்பாற்றுகிருர் என்றும் இம்மாதிரியான பயித்தியக்கார வார்த்தைகளையெல்லாம் நாம் நம்பலாமா? நீயே யோசித்துப் பார்!

சங்கரன்—சரி. தோடகா! நான் ஒன்று கேட்கிறேன். கோபித்துக்கொள்ளாமலும், உனக்குத் தெரிந்ததை மறைக்காமலும் பதில் சொல்லுகிருயா?

தோடகன்—கேள். கோபமென்ன! நான் அறிந்ததை எப்பொழுதாவது உன்னிடத்தில் சொல்லாமல் மறைத்து வைப்பது உண்டா?

சங்கரன்—ஆனுல் சரி! கேட்கிறேன்; உனக்கு இப்பொழுது உயிர் இருக்கிறதா?

தோடகன்—சபாஷ்; நல்ல கேள்வி கேட்டாய்; சங்கரா! எனக்கு உயிர் இருக்கிறது. இதில் உனக்கு ஸந்தேஹம் பிறப்பானேன்?

சங்கரன்—நான் ஒருநாளும் உன் உயிரைப் பார்த்ததில்லை "பார்க்காத பொருளை உண்டென்று நாம் நம்பலாமா" என்று நீதானே இப்பொழுது எனக்குச் சொன்னுய்?

தோடகன்—ஆம் காணாத பொருளைச் சதமென்று நம்பலாகாது என்றுதான் நான் சொன்னேன். அதனால் "எந்தப் பொருளையும் நாம் நமது கண்களால் பார்த்தால் மாத்திரமே நம்பவேண்டும்" என்று கூடவா ஆயிற்று? பார்க்காவிட்டால் என்ன? நான் இதோ நிற்கிறேன்; உன்னுடைய கேள்விகளுக்குப் பதில் அளிக்கிறேன்; என்ற இம்மாதிரியான எனது செய்கைகளைக்கொண்டு "எனக்குப் பிராணன் இருக்கிறது" என்று நீ ஊஹித்துத் தெரிந்துகொள்ளலாகாதா? "காரணம் ஒன்று இல்லாவிட்டால் காரியம் உண்டாகமாட்டாது" என்ற இவ்விஷயம் உனக்குத்தான் நன்றாகத் தெரியுமே!

சங்கரன்—சரி; இன்னும் எனக்கு ஒரு ஸந்தேஹம் உண்டு. அதற்கும் பதில் சொல்லுகிறாயா?

தோடகன்—அதற்கென்ன தடை? இன்னும் ஒன்றென்ன? எத்தனை ஸந்தேஹங்களுண்டானாலும் கேள். எனக்குத் தெரிந்தவரையில் பதில் சொல்லுகிறேன்.

சங்கரன்—தோடகா! இதோ இந்தப் பெட்டியைப் பார்; இந்த வேஷ்டியை நோக்கு; அந்தக் குடத்தைக் கவனி: இன்னும் இந்த வீட்டையும் கவனி; இவைகளை உண்டாக்கினவர் யார்?

தோடகன்—சங்கரா! பெட்டியை உண்டாக்கினவன் தச்சன். குடத்தை உண்டாக்கினவன் குயவன். வேஷ்டியை உண்டாக்கினவன் சேணியன். இந்த வீட்டை உண்டாக்கினவன் கொத்தன்.

சங்கரன்—நீ சொல்வதைப் பார்த்தால் நாம் காண்கிற ஒவ்வொரு பொருளையும் யாராவது ஒருவன் உண்டாக்கியே இருக்கவேண்டும் என்றல்லவோ ஆகிறது; அது அப்படித்தானா?

தோடகன்—ஆம்; அப்படித்தான். ஒவ்வொன்றையும் ஒருவன் உண்டாக்கியே இருக்கவேண்டும்.

சங்கரன்—ஆனால் இந்த உலகத்தை உண்டாக்கினது யார்? ஆலோசித்துச் சொல்.

தோடகன்—அதையும் ஒருவன் உண்டாக்கியே இருக்க வேண்டும். ஆனால் அவனை எனக்குத் தெரியாது

சங்கரன்—அவரைத்தான் கடவுள் என்று நமக்கு உபாத்தியாயர் போதித்தது. ஒவ்வொன்றையும் நாம் இம்மாதிரி ஆலோசிப்போமானால் "நமது உடம்பில் பிராணனை நிறுத்தினவரும் கடவுளே; நம்மை நேற்றையதினம் வரையிலும் இரக்ஷித்தவரும் கடவுளே. இனிமேல் நம்மை இரக்ஷிக்க வேண்டியவரும் கடவுளே. அவர் செயலன்றி அணுவும் அசையாது" என்று நமது உபாத்தியாயர் சொல்லிய ஒவ்வொன்றும் உண்மை என்று விளங்கும். ஆதலால் சற்று ஆலோசித்துச் சொல். தினந்தோறும் நாம் ஜபம் செய்யவேண்டியது அவசியந்தானே?

தோடகன்—ஆமாம் சங்கரா! இத்தனை நாளாக எனக்கு இந்த உண்மை விளங்கவில்லை. இவ்வளவு தெளிவாய் யாரும் எனக்கு எடுத்துச் சொல்லவும் இல்லை. ஜபம் செய்யாவிட்டால் நான் கடவுள்பால் நன்றியற்றவனாகவன்றோ ஆகிறேன். இதற்காகத்தான் "நல்ல சினேகிதர்கள் வேண்டும்" என்கிறார்கள். இனி ஒருபொழுதும் நான் கடவுளை மறக்கமாட்டேன். ஜபம் செய்யாமலும் இருக்க மாட்டேன்.

"தெய்வத்தை யொருநாளும் மறக்கவேண்டாம்"

நீதி வாக்கியங்கள்.

(தொடர்ச்சி)

கருணைக் கடலாங் கடவுளை வணங்கு.
நப்போல் வளைந்து நற்புக ழெய்து.
சக்கர நெறியிற் சததமும் நில்லு.
ஞமலியே யாயினும் ஞயம்பட நடத்து.
டம்பமாந் நடை துன்பமென் றெண்ணு.
தஞ்ச மென்றவர் சஞ்சலம் போக்கு.
நல்லறி வாளரை நாடிச் செல்லு.
பணத்தைப் போக்கினுங் குணத்தை நாடு.
மனையா ளுடனே யிணையாய் வாழு.
யந்திரம் போல யாக்கையைப் பேணு.
ரகசியச் சொல்லை யகத்தி லடக்கு.
லக்ஷியம் வைத்துக் கக்ஷியை வெல்லு.
வரம்பு மீறும் விரயத்திற் கஞ்சு.
சங்கட நோய்க்குச் சகிப்பது மருந்து.
சாடிச் சொல்லைச் சற்றுங் கேளேல்.
சிறப்பைக் கொடுப்பது சீரியர் கேண்மை.
சீவ யிமிசையாற் செய்தவ மழியும்.
சுத்தமுண் டாகிற் சுகமுண் டாகும்.
சூதாடுவதாற் றீதே விளையும்.
செய்வன திருந்தச் செய்வது தகுதி.
சேர்க்கை செய்முன் றீர்க்கமாய் யோசி.
சைகை யறிந்தே செய்வது சமர்த்து.
சொத்தைக் காட்டிலும் வித்தை விசேடம்.
சோதனை பலத்தால் நீதி விளங்கும்.
சௌந்தரி யத்தினுஞ் சாந்தமே சிலாக்கியம்.

ராஜவாழ்த்து.

(காட் ஸேவ் த கிங் என்ற மெட்டு)

துருவம்.

ஸ்ரீ ஸர் வே சா

காக் கு மெம் மன் னனைக்
கா ருண்ய சீ லனைக்
காப் பாற் று க!

வாக் கினு லேற் றவும்
யாக் கையாற் போற் றவும்
சிந் தையி லெண் ணவும்
அ ருள் செய் க!!

பா ரத நாட் டினைச்
சீ ருட னு ளவே
ஆர்ந் த நல் லா யுளைத்
தந் த ருள் க!!!

(முற்றிற்று.)

P. N. PRESS, TANJORE.